# எம்மைத் தாக்கினால் மட்டும் நாம் தாக்குவோம்
# யாழ் மக்கள் கலவரம், பீதி அடையத் தேவையில்லை

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபாய் ஒன்று

ஈழமுரசு

முரசு 2 22-1-86 புதன் (தை 9 ஜ. அவ். 11) முழக்கம் 347

## பிரிகேடியர் ரூபசிங்க அறிவிப்பு

"ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயச் சட்டத்தையிட்டு பொதுமக்கள் எவரும் கலவரமோ, பீதியோ அடையத் தேவையில்லை. அநாவசியமாக மக்கள் மீது ராணுவம் தாக்குதலை மேற்கொள்ளாது. ராணுவ முகாம்கள் மீது 'மோட்டர்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாலேயே இச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. முகாம்கள்மீது ஏதாவது தாக்குதல் நடத்தப் பட்டால் மட்டுமே ராணுவம் பதில் தாக்குதல் நடத்தும்'' என்று நேற்று கோட்டை ராணுவ முகாமில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரிகேடியர் எச். ரூபசிங்கா தெரிவித்தார். புதிய சட்டம் இன்னமும் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படவில்லையென்று தெரிவித்த பிரிகேடியர், ராணுவம் பதில் தாக்குதல் நடத்தும் போது பொதுமக்கள் பாதிக்கப்படாது அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்தார். "ஆயிரம் மீட்டர் எல்லைகளுக்குள்ளிருக்கும் எந்தவொரு அலுவலகத்தையோ, வேறெந்த காரியாலயத்தையோ எவரும் மூடத் தேவையில்லை; இடம் மாற்றவும் தேவையில்லை, அவர்கள் மீது எந்தத் தாக்குதலும் 6ம் பக்கம் பார்க்க

★ இன்று ஆரம்பமாகிறது ★ அனைவரையும் பங்குபற்ற அழைப்பு

# கோட்டை முகாம் மூடும்வரை
# கச்சேரி முன் தொடர்மறியல்

## படிப்படியாக சகல அலுவலகங்களுக்கும் விஸ்தரிக்க அன்னையர் முன்னணி முடிவு

யாழ்: அரசாங்க செயலகம் முன்பாக அன்னையர் முன்னணியினர் இன்று முதல் மேற்கொள்ளவுள்ள மறியல் போராட்டம் கோட்டையில் இருந்து இராணுவம் வெளியேற்றப்படும் வரையில் தொடர்ந்து நடைபெறும் என்று அன்னையர் முன்னணியின் செயலாளர் திருமதி நிர்மலா பாலரடணம் நேற்றுத் தெரிவித்தார்.

இராணுவ முகாம் இங்கிருந்து அகற்றப்பட்டால் பாதுகாப்பு வலயச் சட்டமும் தானாகவே இல்லாமல் போய்விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இம்மறியல் போராட்டத்திற்கு, யாழ். ஆஸ்பத்திரி வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்கள், யாழ்நகருள்ள பிரபல பாடசாலைகளின் ஆசிரியர்கள், பாணவ மாணவியர்கள், நகரிலுள்ள வர்த்தகர்கள், அரசாங்க ஊழியர்கள் போன்றோரும் ஆதரவுதர முன்வந்துள்ளதாகவும் திருமதி பாலரட்ணம் தெரிவித்தார்.

இப்போராட்டத்தில் அதிகளவிலான மக்கள் தினமும் கலந்து கொள்வதன் மூலமே போராட்டத்தில் வெற்றியைப் ...6ம் பக்கம் பார்க்க

## பென்சன் இடைநிறுத்தம்

துரையப்பா ஸ்ரேடியத்தில் வைத்து வழங்கப்படவிருந்த ...6ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வர்த்தகர்கள் இன்று
## கடையடைப்பும் ஊர்வலமும்!

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தை ரத்துச் செய்யக் கோரி யாழ். மாநகர வர்த்தகர்கள் சங்கம் இன்று முழு நாளும் கடையடைப்புச் செய்து யாழ்நகரிலிருந்து கச்சேரிக்கு ஊர்வலமொன்றையும் நடத்தவுள்ளது.

ஊர்வலத்தின் முடிவில் பாதுகாப்பு வலயத்தால் யாழ். வர்த்தகர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை விளக்கி மகஜர் —6-ம் பக்கம் பார்க்க

## முஸ்லிம் மக்கள் ஏற்பாட்டில் 5000பேர் பங்குபற்றிய எதிர்ப்பு ஊர்வலம்

பாதுகாப்புப் படைகளின் முகாம்களைச் சுற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தை நீக்குமாறு கோரி முஸ்லிம் மக்கள் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஐயாயிரத்துக்கும் அதிகமான மாணவ, மாணவியர்களும், பொது மக்களும் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் உற்சாகத்துடன் கலந்துகொண்டார்கள்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகாமையிலிருந்துகாலை 9-45 மணி அளவில் புறப்பட்ட இவ்வூர்வலம் நகரின் பிரதான வீதிகளூடாக நண்பகல் பன்னிரண்டு மணியளவில் யாழ். கச்சேரியை வந்தடைந்து யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்ததுடன் முடிவடைந்தது.

'யாழ். முஸ்லிம்கள் அனாதைகளல்ல; உலக முஸ்லிம் ...6ஆம் பக்கம் பார்க்க

## ஆயுதங்களை கீழே போட்டால்
## சென்னை சென்று பேசவும் தயார் என்கிறார் ஜனாதிபதி

(சென்னை)

இந்திய அரசாங்கம் இலங்கைக்கு ஆதரவு தந்தால் தீவிரவாத நடவடிக்கைகள் மூன்று மாதத்தில் தீர்ந்துவிடும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அரசு விரும்புகிறபோதிலும் தீவிரவாதிகளுடன் இதற்கு அரசியல் தீர்வு காண முடியாது எனவும் சொன்ன அவர் தீவிரவாதிகள் தமது ஆயுதங்களை கீழே வைப்பார்களானால் அவர்களுக்கு நிபந்தனையற்ற மன்னிப்பு வழங்கப்படும் எனவும் கூறினார்.

மேலும் தீவிரவாதிகள் வன் ...6ம் பக்கம் பார்க்க

## தினமும் ரயில் டிக்கட் விற்பனை

யாழ். பொலிஸ் நிலைய வளவிலுள்ள மக்கள் வங்கி மேல் மாடிக் கட்டடத்தில் ரயில் ரிக்கட்டுகள் விற்பனை நடைபெறும் சனி ஞாயிறு உட்பட தினமும் காலை ஏழரை மணி முதல் நண்பகல் பன்னிரண்டு மணிவரையுமே இந்த டிக்கட் விற்பனை நடைபெறும்.

## கண்டுபிடிக்க லலித் உத்தரவு:
## தமிழ்பகுதியில் வெளிநாட்டு கூலிப்படைகள் உள்ளனரா?

தமிழ் போராளிகள் மத்தியில் வெளிநாட்டு கூலிப்படைகள் இருக்கின்றனரா என்ற சந்தேகம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் வடக்கு கிழக்கில் இது பற்றி அவதானிக்கும்படி படையினருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் யாழ். கோட்டை அருகில் இடம்பெற்ற சம்பவத்தில் இருவெளி நாட்டவர்கள் இருந்ததை —6ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறை மக்களின் வேதனைக் குரல்
## "இவ்வாறு வைத்திருப்பதைவிட கடலில் எம்மை வீசிவிடுங்கள்": ஜனாதிபதிக்கு மகஜர்

புதிய பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த சகல துறையைச் சேர்ந்தவர்களுமே பாதிக்கப்படவுள்ளதாகவும், சுமார் முப்பதாயிரம் மக்கள் வீடு வாசல்களை இழந்து நடுத்தெருவில் நிற்கப் போவதாகவும் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவின் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"இப்படியான அபாயகரமான சட்டங்களின் மூலம் தங்களை ஆபத்தான நிலையில் வைத்திருப்பதைவிட கடலில் தூக்கி வீசிவிடுமாறு மக்கள் கேட்பதாகவும்'' இக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச்சட்டத்தால் பருத்தித்துறை மக்கள் அடையப் போகும் இன்னல்களை இரண்டு பக்கத்தில் விபரமாக எடுத்துக் கூறியுள்ள பேராசிரியர் கணேசலிங்கம், இந்த நெருக்கடியிலிருந்து நீங்குவதற்கு புதிய —6ஆம் பக்கம் பார்க்க

## பிரஜைகள் குழு, மக்கள் குழு பிரிகேடியருடன் பேச்சு

யாழ். பிரஜைகள் குழுவினர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நேற்றுக்காலை கோட்டை ராணுவ முகாமில் பிரிகேடியர் ரூபசிங்காவைச் சந்தித்து பேசினர்.

புதிய பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் ஏற்பட்டுள்ள தாக்கங்கள், பொது மக்களின் அச்சம், அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் பற்றி இங்கு எடுத்துக் கூறப்பட்டது ...6ம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

**வரி விளம்பரம்**

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை போஸுடன் சுண்டுக்குளியில் இருந்து சின்னக்கடை வரை வானில் போகும்போது தொலைந்து போயிற்று தயவுசெய்து எடுத்தவர்கள் திருப்பித் தரும்படி தயவாய்க் கேட்கிறேன்.
S. Swaminathan, Pri ate Dispensary, Post Office Road, Chavakachcheri. R/16358

## இரத்ததானம்

(உடுவில்)

உடுவில் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட சில இளைஞர்களின் விருப்பத்திற்கிணங்கவும், யாழ். அரசினர் வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் நச்சினார்க்கினியரின் வேண்டுகோளுக்கிணங்கவும் நேற்று இணுவில் தனியார் ஆஸ்பத்திரியில இரத்ததானம் வழங்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது. இந் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை உடுவில் சுகாதாரப் பரிசோதகர் திரு க. தங்கவேலாயுதம் மேற்கொண்டிருந்தார்.

## நிருவாகிகள்

(ஏழாலை)

ஏழாலை தெற்கு தமிழ்ப் பொதுப்பணிமன்ற சனசமூக நிலையத்தின் புனருத்தாரணக் கூட்டம் அண்மையில் திரு. வி. குணரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர். திரு. சி. கஜமுகலிங்கம். உபதலைவர் திரு க. யோன்துரைராசா, செயலாளர் திரு எம். ஜீவகாந்தி, உப- செயலாளர் திரு. மு. ஸ்ரீரஞ்சித் பெருளாளர் வைத்தயகலாநிதி சி. சிற்றம்பலம், உப- பொருளாளர் திரு. சு. சந்திரலிங்கம், கணக்குப் பரிசோதகர் திரு. சி. சிவகாந்தன், 15 பேர் கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.


# நொதேண் பெஸ்ற் இன்ஸ்ரிரியூட்

408, பிரதான வீதி, சுண்டுக்குளி.
யாழ்ப்பாணம்.

**A/L PAPER CLASSES**

பௌதீகவியல் - பொறியியல் R/16355
இரசாயனவியல் - வெப்ப இரசாயனம்

**ஆரம்பம்: 22.1.86 பி.ப. 2.15**



**REPAIR SERVICE**

வானொலி, T. V. மற்றும் மின் உபகரணங்கள் திருத்துவதற்கு டைனமிக் என்ஜினியரிங் லிமி. 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. B/1025





# திறப்பு விழா

அன்புடையீர்,

நிகழும் குரோதன வருஷம் தைத்திங்கள் ஒன்பதாம் நாள் 22-1-86 புதன்கிழமை வரும் சுபவேளை காலை 7-00 மணிக்கு எமது

**"தேவி அரிசி ஆலை"**

விற்பனை நிலையத்தை

**திரு. இ. கமலநாதன் அவர்கள்**

(பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர், அச்சுவேலி)

திருவருள் துணைகொண்டு திறந்து வைக்க உள்ளார். எமது ஸ்தாபன அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து சிறப்பித்து வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**வே. முத்துலிங்கம்**
உரிமையாளர் :
தேவி அரிசி ஆலை
அச்சுவேலி.

B/1026





# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
# கேள்வி அறிவித்தல்

இசன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள ஆட்டிறைச்சிக்கடை, குருநகர் சந்தைக் கடை ஆகியவற்றை அவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலத்துக்கு 15-02-86ம் திகதி முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 06-02-86ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணையும், கேள்விப் படிவக்கட்டணம் ரூ. 50/- செலுத்துவதின்பேரில் 05 - 02 - 86ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரையும் யாழ் மாநகராட்சிமன்ற சிறு பியடி அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவங்கள் யாழ். மாநகராட்சிமன்ற இந்துவிடுதி அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல்வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ். மாநகராட்சிமன்ற ஆணையாளருக்கு 06-02-86ம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.


### அட்டவணை

| | குத்தகை விபரம் | குத்தகைக்காலம் | கேள்விப்பிணை | மாதவாடகை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | கொட்டடிச்சந்தை: ஆட்டிறைச்சிக்கடை இல. 2 | 22 1/2 மாதம் | ரூ. 2500/- | ரூ. 75/- | ரூ. 20300/- |
| 2. | குருநகர் சந்தைக் கடை இல. 73 | 5 வருடம் | ரூ. 1500/- | ரூ. 100/- | ரூ. 17000/- |

3. இக்கேள்வி சம்பந்தமான இதர விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற (சிறும்பியடி) நானுவித இறைவரிக்கிளை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 20-01-86. B/1024


❋ கெருடாவில், இராமச்சந்திரன் செல்வராணி தம்பதியின் மகள் சந்திரிகா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ கொழும்புத்துறை, ஸ்ரீபாலராசா சரோஜினிதேவி தம்பதியின் மகன் குருதருசன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ மிருசுவில் மகளிர் திட்டம், ராஜயோகம் குலபூஷணம் தம்பதியின் மகன் அன்ரன் பிறேமராஜன் இன்று தனது பதினோராவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ வேலணை சித்திரவேலாயுதம் தம்பதியின் மகள் மகிழ்தினி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ நல்லூர், தியாகராஜா தவமணி தம்பதியின் மகள் தர்ஷிகா இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ ஏழாலை மேற்கு, பொன்னம்பலம் பரமேஸ்வரி தம்பதியின் மகள் துஷ்யந்தினி இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ நல்லூர் செட்டித்தெரு, கனகரெத்தினம் பாக்கியம் தம்பதியின் மகள் தயாளினி இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ தொல்புரம் பத்தானை, சிவபாக்கியநாதன் தனலட்சுமி தம்பதியின் மகள் நர்மதாதேவி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ அரியாலை, குழந்தைவேலு பத்மினி தம்பதியின் மகன் சுரேந்தின் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ கொக்குவில் மேற்கு, ரவீந்திரன் மாலினி தம்பதியின் மகன் லக்சன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## அடைக்கலம்

(ஏழாலை)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஏற்பட்ட வதந்தியால் வீடு வாசல்களை விட்டு வெளியேறி ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையில் தஞ்சம் புகுந்த அகதிகளை, ஏழாலை இளம் விவசாயிகள் கழகத்திட்ட முன்னணியாளர் திரு சீ. கனகலிங்கமும், பாடசாலை ஆசிரியர்களும், அயலவர்களும் ஆற்றிய சேவை போற்றக்குரியது.


**KLEEN KHUT**

தெளிவான தமிழ், ஆங்கில தட்டெழுத்து வேலைகளைப் பெறவேண்டுமா? நாடுங்கள்!

**கிளீன் கட்**

239, மின்சார நிலைய வீதி,
(ஆஸ்பத்திரி பின்புறம்)
யாழ்ப்பாணம்.

B/1020



## மங்களகரமான திறப்பு விழா

# Northern Special Engineering, Architectural

CONSULTANTS & CONTRACTORS.
Kodikamam Road, Nelliyadi, Karaveddy.

Chief Consulting Engineer:
Mr. A. Nadarasah
B Sc. (Eng) M. I. C. E. (Lond.) M, Sc.

Design Consultant:
Mr. K P. Shanmuganathan (Architectural Designer)

காலம்: 22-01-1986 (புதன்கிழமை)
பிற்பகல் 2-00 மணிக்கு

இடம்: கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டி

தலைவர்: திரு. க. சிவபாதசுந்தரம், B. Sc (Hons.)
(அதிபர் விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)

பிரதம விருந்தினர்: திரு. இ. ஐயாத்துரை
(உதவி அரசாங்க அதிபர், கரவெட்டி)

மங்கள விளக்கேற்றுதல்: 1. திரு K. சண்முகநாதன் (அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், யாழ். அபி. சபை, நெல்லியடி உபஅலுவலகம்)
2. திரு. K. சதாசிவம் (அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், யாழ். அபி சபை, கட்டைவேலி உப அலுவலகம்)

விளம்பரப்பலகை திரைநீக்கம்: திரு. V தில்லைநாதன்
(முகாமையாளர், இலங்கைவங்கி, நெல்லியடி)

வரவேற்புரை; கவிஞர் மு. கந்தப்பு (மன்னவன்)
(அதிபர், மாணிக்கவாசக வித்தியாலயம்)

மற்றும் பல அதிபர்கள், கூட்டுத்தாபனத் தலைவர்கள், அதிகாரிகள், ஆசியுரை வழங்குவர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

R/16354 நன்றி. — ஸ்தாபன நிர்வாகிகள்



# வெளிநாட்டு பிரயாணம்

பிரான்ஸ், இத்தாலிக்கு விரைவில் அழைத்துச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். சொற்ப இடங்களே உள்ளன. உடன் தொடர்பு கொள்க. 22ம் திகதி புதன்கிழமை, 23ம் திகதி வியாழன், 24ம் திகதி வெள்ளி காலை 8 மணி முதல் 12 மணிவரை.

**S. நடராசா**

K. K. S. வீதி, கொக்குவில் சந்தி,

R/16357

திருமலை, முல்லை, மட்டுநகர், மன்னார்

## அகதிகள் நிலை; வல்வையில் விரிவாக ஆராயப்பட்டது

(வல்வெட்டித்துறை)

வல்வையில், திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார் பகுதிகளிலிருந்து வந்த அகதிகளின் கஷ்டநிலை பற்றி ஆராயும் பொருட்டு வல்வை அகதிகள் புனர் வாழ்வுச் சபையினரும், வல்வைப்பிரஜைகள் குழுவினரும் கூட்டம் கூடிய பொழுது, நாளுக்கு நாள் அகதிகளின் தொகை பெருகி வருவதைப் பற்றியும், அரசாங்கம் கடந்த 15-1-86 முதல் அகதிகளுக்காக வழங்கி வந்த நிவாரணத்தை நிறுத்திவிட்டதையும் சுட்டிக்காட்டி வல்வை அகதிகள் புனர் வாழ்வுச் சபைத் தலைவர் திரு. எஸ். எஸ். கந்தசாமி பேசினார்.

''இச்சபையின் உதவியுடன் இயங்கி வரும் அகதிகள் முகாமில் 40 குடும்பங்கள் மொத்தம் 188 உறுப்பினர்கள் தங்கியிருக்கின்றனர், இதைவிட வல்வையில் தனியார் வீடுகளிலும் வசித்துவரும் சுமார் 200குடும்பங்கள், அரசாங்கம் வழங்கி வந்த நிவாரணத்தை நிறுத்தியதன் காரணமாக தமது உணவுக்கே பெரும் கஷ்டப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இது விஷயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து மீண்டும் அகதிகளுக்குரிய நிவாரணத்தை வழங்கும்படி கோரவேண்டுமெனவும்,'' அவர் தனது உரையின் போது வல்வை பிரஜைகள் குழுவினரைக் கேட்டுக் கொண்டார்.

வல்வையில் அகதிகளின் நிலை பற்றி வல்வைப்பிரஜைகள் குழு சார்பில் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பியிருப்பதாகவும், மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளையும் சந்தித்து பேசியுள்ளதாகவும், மீண்டும் பேச இருப்பதாகவும் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. எஸ். குமாரசாமி கூறினார்.

## இவ் வருட ஆரம்பக் கடன் வழங்கலில் தாமதம் ஏனோ?

(கொக்குவில்)

பத்து இலட்சம் வீட்டுத்திட்டத்தின் கீழ் வருடத் தொடக்கத்தன்று வழங்கப்படும் கடன்கள் இம்முறை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வழங்கப்படவில்லை.

கடந்த ஆண்டு வருடத் தொடக்கத்தன்று ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உள்ளவர்களுக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் வைத்து கடன் வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டு கடன் பெற விண்ணப்பித்து ஒப்பந்தம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் ஏற்கனவே விசேட சேவை அலுவலர்களினால் கையளிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமரர் வைத்திலிங்கம்

## மற்றவரையும் வாழவைத்து தாமும் வாழ்ந்த பண்பாளர்

### அஞ்சலி வைபவத்தில் பாராட்டு

(வண்ணார்பண்ணை)

''பூலோகத்தில் எத்தனையோ தேசத்தவர்கள், மதத்தவர்கள், நிறத்தவர்கள், குணத்தவர்கள் வாழ்கிறார்கள். மரணம் என்பது இன்றைய கால கட்டத்தில் காலையோ, மாலையோ, இரவோ ஏற்படும் என்று ஏங்கித் தவிக்கிற நேரத்தில் நாம் கூடியிருப்பதும் சாலச் சிறந்தது என்று கூறமுடியாது. பாதுகாப்புக்காக எங்கெங்கேயெல்லாம் ஓடி ஒழியும் சிறுவர்கள், தாய் தந்தையர்கள் வேதனையின் விளிம்பில் சிக்கியுள்ளதை நினைத்து நாம் கண்ணீர் உகுக்காமல் இருக்க முடியாது.

மக்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். தானும் வாழான், மற்றவனையும் வாழ விடமாட்டான்; தான் மட்டுமே வாழவேண்டும் மற்றவனைப் பற்றி சிந்திப்பதில்லை. இப்படியான சுயநலம்; தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கும் புண்ணியவான்கள்; தம்முடைய உயிரை பரித்தியாகஞ் செய்த சமய, சமூக மேதாவிகள். அமரர் இளையதம்பி வைத்திலிங்கம் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைத்த கோமகன்.''

இவ்வாறு யாழ். திவ்ய ஜீவன சங்கம் ஏற்பாடுசெய்த அமரர் இ. வைத்திலிங்கம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் பண்டிதர் நீ. சி. முருகேசு தெரிவித்தார்.

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில், வைத்திலிங்கம் அவர்களின் நிழற்படத்தை நல்லை ஆதீன குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் திரைநீக்கம்செய்து வைத்தார்.

இங்கு செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுகையில்,

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் மார்ச் மாதம் நான்காம் திகதி நடைபெற்ற கொள்ளையின்போது நாம் துக்கமடைந்த வேளை, அமரர் இ. வைத்திலிங்கம் அவர்களே முதலில் வந்து எமக்கு ஆறுதல் கூறினார். அவர் ஆன்மீக வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். அவர் ஆண்டுதோறும் புனித ஸ்தலங்களை தரிசித்தும், பெரியோர்களைத் தரிசித்தும் வாழ்ந்து வந்தார். ஆரம்பத்தில் யாத்திரையை எமக்கு நெறிப்படுத்தியவர் அப்பெரியார். அதனால்தான் எனக்கும் யாத்திரையில் விருப்பம் ஏற்பட்டது. அமரர் வைத்திலிங்கத்தின் தந்தையார் தீர்த்த யாத்திரை மேற்கொண்டு முக்குளித்தாலும் குளித்தே தவம் இருந்து அமரரை தவப் புதல்வனாக பெற்றெடுத்தனர் என்று குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில், சங்கத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம், சிவதர்ம வள்ளல் க. கனகராசா உட்பட பலரும் உரை நிகழ்த்தினர்.

## இடமாற்றம்

(ஏழாலை)

நாவற்குழி புகையிரத நிலையத்தில் புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றிய ஏழாலை தெற்கைச் சேர்ந்த திரு.எஸ்.வி.அரியரத்தினம் தலை மன்னார் புகையிரத நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## ஆயுர்வேத வைத்தியம் சகல நோய்களையும் தீர்க்கும்; ஆனால் மக்கள் நம்பிக்கையில்லை

(வேலணை)

''சுதேச உற்பத்தியில் மக்கள் கூடிய கவனம் செலுத்தி வரும் இக்கால கட்டத்தில் சுதேச மருத்துவத்தின் சிறப்பை உணர்ந்து இச் சிகிச்சையை பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும். மனிதனுக்கு ஏற்படும் சகல நோய்களையும் ஆயுள்வேத வைத்தியம் தீர்க்கக் கூடியதாக இருந்தும் மக்கள் அதிக அளவில் இன்னும் நம்பிக்கை வைக்காதது துரதிர்ஷ்டவசமான தொன்றாகும்''.

வேலணை உப அலுவலக ஆயுள்வேத மருத்துவமனையின் ஆயுள்வேத வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பத்மாவதி புஷ்பநாதன் எம்மிடம் இக்கருத்தை தெரிவித்தார். அவர் மேலும் சுதேசமருத்துவ முறைபற்றி கருத்துத் தெரிவிக்கையில் இவ்வைத்திய முறை மற்றைய மருத்துவ முறைகளிலும் பார்க்க வெகு சிறந்த சிகிச்சை முறையாகும். மக்கள் இக்கால கட்டத்தில் இச்சிகிச்சைமுறையில் நம்பிக்கைகொள்ள வேண்டும்.

தற்போது மூளை மலேரியா என்று சொல்லப்படும் யப்பானிய சுரய்ச்சலினால் பலர் இறந்துள்ளனர். இதற்கு மேலைத்தேய மருத்துவமுறையிலும் பார்க்க ஆயுள் வேத வைத்தியமே சிறந்ததென அரசு உணர்ந்துள்ளதுடன், அதுபற்றி ஆராய்ந்து உடனடியாக பல இலட்சம் மாத்திரைகளைச் செய்து விநியோகித்து வருகின்றது. இதிலிருந்து நாம் உணர வேண்டியது யாதெனில் எவ்வித ரோகங்களுக்கும் சுதேச மருத்துவமுறை நல்ல பலனளிக்கின்றது. இதுபற்றி மேலும் ஆராயப்பட வேண்டும். மக்களும் நம்பிக்கையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எமது மருத்துவத்தை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் ஈழமுரசு மூலம் வலியுறுத்தி கூறினார்.

## ஆனையிறவில் முகமூடி மனிதர்

(கிளிநொச்சி)

நேற்று ஆனையிறவு தடை முகாமில் பஸ்பிரயாணிகள் கடுமையாக சோதனையிடப்பட்டனர். ஒரு முகமூடி நபரால் பல இளைஞர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டனர். கைது செய்யப்பட்ட இளைஞர்களில் அதிகமானோர் கிளிநொச்சி இளைஞர்களாவர். ரி. கணபதி, அ. கனகசிவம் ஆகிய கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் பஸ்ஸிலிருந்து கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டதாக அவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி பிரஜைகள் குழுவுக்கு புகார் தெரிவித்துள்ளனர்.

## 'ஆலயத்தையொட்டி கல்வி அறநெறி ஓங்க வேண்டும்'

(ஊரைதீவு)

'' மூந்நூறு ஆண்டுகளுக்கு மேல் கோயிலோ உருவமோ பூசையோ யாதொன்றுமின்றி தேவார திருவுருவில் மட்டுமே இருந்த திருக்கேதீச்சரத்தைப் புனரமைத்து பொலிவும் வனப்பும் மிக்க கோயிலாக்கிய பெருமைக்குரியவர்கள் சைவத் தமிழ் மக்கள். காடு மண்டிக் கிடந்த திருக்கேதீச்சரத்தை கவினுறு கோயிலாகப் புனரமைக்க வேண்டுமென்று உணர்வூட்டியவர் ஆறுமுகநாவலரே. நாவலரின் தூண்டுதலால் நாட்டுக்கோட்டை நகரத்தாரும் யாழ்ப்பாணத்துத் தனவந்தர்களும் திருக்கேதீச்சரத்தைப் புரனமைக்க வழிகோலி புதிய சரித்திரம் படைத்தனர். இத்தகைய பெருந்தொண்டர்களின் வழி வந்த நாம் ஆலயப் புனரமைப்புப் பணிகளைச் செய்து எமது கலை, கலாசாரம் என்பவற்றை ஆலயங்களை ஒட்டி வளர்க்க வேண்டும். எண்ணத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே ஆயிரமாயிரம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கி வரும் வரலாற்றுப் பெருமை சைவசமயிகளுக்குண்டு. ஆலயங்களில் தேர்களையும் கோபுரங்களையும் உயர்த்துவது போன்று மக்களின் மனதையும் வளத்தையும் உயர்த்த வேண்டும். ஆலயத்தை ஒட்டி அறப் பணிகளும் கல்விப்பணிகளும் வளர வேண்டும்.''

புங்குடுதீவு மடத்துவெளி அருள் மிகு வீரகத்தி விநாயகர் ஆலய வைரக்கல் திருப்பணிக்கான அத்திவாரக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தமிழர் கலாசாரச் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிவஸ்ரீ நா. கணேசராஜக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் ஆலய பொதுப் பிரதிநிதி ந. இராசதுரை ஆசிரியர், புங்குடுதீவு வல்லன் நீதி விசாரணைக் குழுத் தலைவர் கு. அ. குழந்தைவேலு ஆகியோருட்படப் பலர் பேசினர். தொழிலதிபர் நா. சொர்ணலிங்கமும் ஆலயபரிபாலன சபைத் தலைவர் க. அம்பலவாணரும் அத்திபாரக்கல்லை நாட்டினர். சபைச் செயலாளர் என். பி, கனகலிங்கம் நன்றி நவின்றார்.

## ஆட்சேபம்

(நல்லூர்)

தெல்லிப்பளை பாவலர் துரையப்பாபிள்ளை வீதியில், தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குமிடையில் மாட்டிறைச்சி விற்பனை நிலையமும், மாடுவெட்டும் இடமும் அமைக்கப்படவிருப்பதை ஆட்சேபித்து தெல்லிப்பளை செல்வா ஐக்கிய கலாச்சார நிலையம் யாழ். அரசாங்க அதிபருக்கும், தெல்லிப்பளை மாவட்ட அபிவிருத்திச் சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கும், காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரிக்கும் அவசர கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

இக் கடிதத்தில், இந்த விடயத்தில் உடன்தலையிட்டு இந்த மாட்டிறைச்சிக் கடையையும், மாடு வெட்டும் நிலையத்தையும் இந்த வீதியில் திறக்க விடாமல் தடை செய்யும்படி கோரப்பட்டுள்ளது.

மக்கள் நலனுக்கான சங்கம்

## கைக்கொண்ட நோக்கம் நிறைவேறாவிடின் ஏது பயன்

(நீர்வேலி)

''பாவனையாளர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் பாவனையாளர்களுக்கு பாதுகாப்பளிப்பளிப்பதற்காகவே. எந்த நோக்கத்திற்காக சங்கம் உருவாக்கப்பட்டதோ அச்சங்கம் அந்த நோக்கத்தை திறம்பட கைக்கொள்ள முடியாதவிடத்து இருப்பதில் தான் என்ன பயன்? சங்கத்தில் பொதுமக்கள் அனைவரும் பங்கு கொள்வது சிரமம். ஆகவேதான் பொது மக்களின் சில பிரதிநிதிகள் சங்க நிர்வாகத்தில் இடம் வகிக்கின்றனர். பொதுமக்களின் ஏகோபித்த விருப்பத்தின் பேரில் சங்க நிர்வாகத்தில் இடம் பெறும் அங்கத்தவர் பொது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும்.''

இவ்வாறு கோப்பாய் உதவி அரச அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற பிரதேச பாவனையாளர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சபாபதிப்பிள்ளை தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

கோப்பாய்த் தொகுதியில் உள்ள பன்னிரண்டு பாவனையாளர் சங்கப்பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ''பாவனையாளர் சங்கம் பாவனையாளரிற்குப் பாதுகாப்பளிப்பதற்கான முதல் நடவடிக்கையாக நிதான விலைப்பட்டியலை வெளியிடல்வேண்டும்'' என்றும் கூறினார்.

அடுத்து உரையாற்றிய கூட்டுறவு உதவியாணையாளர் திரு க. இரட்ணம் 'பாவனையாளர் சங்கங்களுடன் வர்த்தகர் சங்கங்களையும் இணைத்து பாவனையாளருக்கும் வர்த்தகர்களிற்கும் இடையே உறவுகளை ஏற்படுத்த வேண்டியது சங்கப் பிரதிநிதிகளின் கடமையாகும்' என்று கூறினார்

அடுத்து இளைப்பாறிய உதவிக் கூட்டுறவுப் பகுதி ஆணையாளர் திரு. த. பாலசுந்தரம் இருபாலைபாவனையாளர் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதி திரு. க. ச. அழகரட்ணம் ஆகியோரும் உரையாற்றினர்.

நிர்வாக சபைத் தெரிவின் பின் திரு. ச. க. ஆறுமுகம் நன்றியுரையாற்றினார். நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர். தலைவர்;- திரு. மு. சபாபதிப்பிள்ளை (உதவி அரச அதிபர்) செயலாளர்:- திரு. க. ச. அழகரட்ணம், உப செயலாளர்:- திரு. க. அரியரட்ணம் பொருளார்:- திரு. ம. க. நடராசா.

## மினி இறைச்சிக்கடை குறித்து ஆணையாளரிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

குருநகர் இரண்டாம் வட்டாரப் பகுதியில் இரண்டாம் குறுக்குத்தெரு வீதிக்கண்மையில் மினி இறைச்சிக்கடை ஒன்று இம்மாத முற்பகுதியில் திறக்கப்பட்டு இயங்கிவருவதாக யாழ். மாவட்ட மாட்டிறைச்சி வியாபாரிகள் சங்கம் யாழ். மாநகராட்சி ஆணையாளருக்கு முறையிட்டுள்ளது.

இதே போல் குருநகர் தண்ணீர் தாங்கிக்கு அருகாமையிலும் இத்தகையகடையொன்று திறக்க முயற்சி நடப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது விடயமாக சூழவுள்ள சங்கங்களையும் மன்றங்களையும் வரவழைத்து சின்னக்கடை இறைச்சிக் கடையாளர் நிலையை விளக்குமாறு இச்சங்கம் மேலும் தம் மகஜரில் கேட்டுக் கொண்டுள்ளது.

உதய சிந்தனை

ஏமாற்றுபவர்கள் நீண்ட நாள் நிலைத்திருக்க மாட்டார்கள்.
—மகாத்மா

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

22-1-86 புதன்கிழமை (குரோதன) தை-9

# கையெழுத்து இயக்கத்தை முன்னெடுப்பது அவசியம்

இராணுவ முகாம்களை ஒரு சாட்டாக வைத்து, தமிழர்களின் உயிருக்கு உலைவைக்கும் அரசாங்கத்தின் புதிய பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் ஏற்பட்டிருக்கும் தாக்கம், மக்கள் எழுச்சியாக இப்போது கனல் கொண்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கென விசேஷமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் பாதுகாப்பு வலயச்சட்டத்தை உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்பதில் இங்கு வாழும் மக்கள் தங்கள் குறுகிய வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டுப் போராட்டம் நடத்துகின்றனர்.

இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர்கள் என்று சகல மதத்தினருமே தங்கள் எதிர்ப்பை ஒன்று பட்டுக்காட்ட முன்வந்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்குள் இராணுவத்தினால் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஒன்பது முஸ்லிம்கள், எந்தத் தவறும் செய்யாத அப்பாவிகள், அநியாயமாகப் பலியானதை சுட்டிக்காட்டி முஸ்லிம் மக்கள் தமது போராட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களில் பெரும் தொகையானவர்களும் யாழ்நகரிலேயே வசிக்கின்றனர். இவர்களின் வர்த்தக நிலையங்களும் இங்கேயே அமைந்துள்ளன.

இந்த வகையில், கோட்டை ராணுவம் புதிய சட்டத்தின் கீழ் தாக்குதல் நடத்துமானால் முஸ்லிம்களே அதிகமாகப் பாதிக்கப் படுவர் என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது முற்றிலும் சரியானதாகும்.

இதனை அரசுக்குத் தெரியப்படுத்தும் வகையில் நேற்றுக் கடையடைப்பு நடத்தி, கச்சேரிவரையான ஊர்வலமொன்றையும் இவர்கள் நடத்தியுள்ளனர்.

மேலும் பல அமைப்புக்கள், ஸ்தாபனங்கள், மன்றங்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் குடாநாட்டில் தொடர்ச்சியான எதிர்ப்பு இயக்கங்களை நடத்த முன்வந்துள்ளன.

தமிழ் பிரதேசங்களின் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு நேற்று முன்தினம் அதன் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் கூடி தற்போது எழுந்துள்ள புதிய நெருக்கடி பற்றி ஆராய்ந்துள்ளது.

இது தொடர்பாக உடனடியாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பல்வேறு ஆலோசனைகள் இக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் இது விடயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்பற்றி பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்

பொதுமக்கள் அனைவரும் பங்குபற்றும் கையெழுத்து இயக்கமொன்றை உடனடியாக ஆரம்பிப்பதற்கு இணைப்புக் குழு தீர்மானித்துள்ளது.

இதுவரை காலமும் இடம்பெற்ற சம்பவங்களையும், இனி மேலும் தமிழினத்துக்கு ஏற்படவுள்ள அபாயங்களையும் விரிவாக எடுத்துவிளக்கும் மகஜர்களை சர்வதேச மன்றுகளுக்கும், உலகத் தலைவர்களுக்கும் அனுப்புவதற்காக மக்கள் கையெழுத்து கட்டாயமானது என்று கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை, காமன்வெல்த் தலைவர்கள் அமைப்பு, மனித உரிமைகள் ஸ்தாபனம், அணிசேரா நாடுகள் நிறுவனம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட, இலங்கை அகதிகள் அரசியல் தஞ்சம் கோரி அடைக்கலம் புகுந்திருக்கும் நாடுகளின் அரசாங்கங்கள், எதிர்க்கட்சிகள் ஆகிய அனைத்துக்கும் இம்மகஜரின் பிரதிகள் அனுப்பப்படவேண்டுமென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப்பகுதி பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் இம் முயற்சிக்கு, அனைத்து மட்டத்திலான அமைப்புக்களும் பரிபூரணமான ஆதரவு வழங்க வேண்டும் என்பதை நாமும் வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம்.

பாடசாலைகள், வாசிகசாலைகள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், வழிபாட்டு நிலையங்கள் மட்டத்திலிருந்து சகல நிறுவனங்களும் கையெழுத்து இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல முன்வரவேண்டும்.

ஒவ்வொருவரதும் கையெழுத்து, சர்வதேசமட்டத்தில் பொன்னெழுத்துக்களாக மதிப்புப்பெறலாம்.

# பின் தங்கிய மக்களின் பிதாமகர்

# அமரர் செனட்டர் ஏ. பி. இராசேந்திரா

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற வாக்கியத் திற்கமைய வாழ்ந்து காட்டிய பெருந்தகை மூன்னுள் செனட்டர் அமரர் முதலியார் ஏ. பி. இராசேந்திரா அவர்கள் மறைந்து 23 வருடங்கள் மறைந்து விட்டபோதிலும், அவர் தமிழ் கூறும் நல்லுலகிற்கும், சிறுபான்மைத் தமிழர்களின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் ஆற்றிய சேவைகள் என்றென்றும் அவரை நினைவுறுத்திக் கொண்டே இருக்கும். இவரின் உத்தியோகத் திறமையையும், சனசமூக சேவையையும் நன்குணர்ந்த அரசாங்கம் ஆறும் ஜோர்ச் மன்னரின் பிறந்த தினமான 1941 ம் ஆண்டு ஆனி மாதம் 12 ம் திகதி ''முதலியார்'' என்னும் கௌரவ பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தியது

செய்யுள் வசனநடை எழுதுவதில்பாண்டித்தியம்பெற்று விளங்கினார். பண்டைய காலத்தில் சில பெரியார்க்கு தமிழரசர்கள் கொடுத்துதவிய தோம்புகளைப் பரிசீலனை செய்து அவற்றின் சாராம்சத்தை ருசுப்படுத்தும் பொறுப்பையும் ஏற்றிருந்த முதலியாரவர்களின் சப்த சாஸ்திர முறைப்படி தமிழ் கற்பிக்கும் திறமை வாய்ந்தவர்.

அமரர் இராசேந்திரா தன்னலமின்றி எச்சமூகத்தவரினதும் முன்னேற்றத்திற்காக இரவும் பகலும் உழைத்த பரித்தியாகி சிறு பான்மைச் சமூக மக்களின் முன்னேற்றம்,அவர்களின் சேவை ஆகியவற்றைக் கவனிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர் மகா சபையை வழிநடத்தி அதன் தலைவராகவும் பதவி வகித்து அரும்பணியாற்றினார்.

1947 ம் ஆண்டு இலங்கை அரசியல் மாற்றம் ஏற்பட்டு பாராளுமன்றம் அமைக்கப் பட்டபோது அன்றைய கவனர் ஜெனரல் சோல்பரிப் பிரபு அமரர் இராசேந்திராவைச் செனட்டராக நியமித்தார். முதன்முதலாகச் சகல பொது ஸ்தாபனங்களிலுமுள்ள பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களும், ஏனைய சமூகத்தவர்களைப் போன்று தங்கு தடையின்றிப் பங்கு பெற முழு உரிமையும் அளிக்க வேண்டுமென்று 1948 ம் ஆண்டு செனற் சபையில் முதலியார் சமர்ப்பித்த பிரேரணையை அரசாங்கம் ஏகமனதாக ஏற்று நடைமுறைப்படுத்தியது.

பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் முன்பு பதிவுகாரரால் கொடுக்கப்பட்ட தாழ்த்தப் பட்ட சமூகத்தவர் என்பதைச் சுட்டிக்காட்டும் பெயர்களை விரும்பிய வண்ணம் மாற்றிக் கொள்ளக் கூடியதாக 1951 ம் ஆண்டு பிறப்பு, இறப்பு, புதிய சட்டத்தில் விபரித்துக்காட்டி, எம் சமூகத்தவரின் சுதந்திரத்தை நிலைநாட்டினார். முதலியார் அவர்கள் செனட் சபையில் அங்கம் வகித்த காலத்தில் யாவரும் பிரமிக்கத் தக்கவகையில் தம் சொல் வன்மையாலும்செயற்றிறனினாலும் பல சாதனைகளை நாட்டிற்கும் சமூகத்திற்கும் ஆற்றினார். இவரின் ஆழ்ந்த அறிவும், அரசியல் ஞானமும் நாடெங்கும் அவரது புகழைப் பரப்பின.

இவரது தேசியத் தொண்டின் ஆற்றலைப் பாராட்டி இரண்டாம் எலிசபெத் மகாராணியார் 1953ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி எம். பீ. ஈ என்னும் கௌரவ பட்டத்தையும், பட்டாபிசேக ஞாபகச் சின்னப் பதக்கத்தையும் வழங்கியுள்ளார். 16. 06. 1884 ல் பிறந்த முதலியார் இராசேந்திரா 22. 1. 1963 ல் அமரரானார்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக விளங்கிய அமரர் இராசேந்திரா உண்மையான தேசத்தொண்டனும், சீர் திருத்தவாதியுமாக விளங்கிய பெருந்தகையாவார்.

● ஆ. மாணிக்கம்

# பனைவள அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் கைதடியில் அமையும்

(சுண்டுக்குளி)

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டு வரும் விஞ்ஞான ரீதியிலான பனைவள ஆராய்ச்சி வேலைகளைத் துரிதப்படுத்து முகமாகப் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தேசிய பனை வள அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையமும், சபையின் தலைமைக்காரியாலயமும் 25 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்படவுள்ளன.

இப் புதிய கட்டடங்களுக்கான அடிக்கல் இம்மாதம் 31ம் திகதி பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசாவினால் நாட்டி வைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடியிலுள்ள சபைக்குச் சொந்தமான காணியில் நிறுவப்படும் சபைத் தலைமைக்காரியாலயம், ஆராய்ச்சி நிலையக் கட்டட வேலைகள் இவ்வருட இறுதிக்குள் முடிவடைந்து விடுமென்று தெரிவிக்கப்பட்டது.

1983 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு விவசாய நிறுவனமும், பனம் பொருள் அபிவிருத்திச் சபையும் யாழ்ப்பாணத்தில் இணைந்து நடாத்திய சர்வதேச பனை வளத் தொழிற்பாட்டு மகாநாட்டில் 'நிப்றுட்' எனப்படும் தேசிய பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவுவதென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது பனம் பயிர் உற்பத்தி, பயிர்ப் பாதுகாப்பு, பதனிடல், சந்தைப் படுத்தல் ஆகிய நான்கு முக்கிய அம்சங்களையும் உள்ளடக்கியதாக இந்த ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுமென்றும், இந்த ஆராய்ச்சிக்கான சகல உதவிகளும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வழங்கப் படுகிறதென்றும் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா தெரிவித்தார்.

ஏற்கனவே திக்கம் என்னுமிடத்தில் பனம் பொருள் அபிவிருத்திச் சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையம் பனம் பொருள் பல் தொழில் தொகுப்பு நிலையமாக மாற்றப் பட்டுள்ளது.

## மகாயாகம்

நாட்டு மக்களின் ஷேமத்திற்காக நல்லூர் பகவான் ஸ்ரீ சத்தியசாயி இல்லத்தின் ஆதரவில் நல்லூர் சிவன் கோவிலில் மகாயாகம் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வழிபாட்டு நிகழ்ச்சி 23-ம் திகதி முதல் 25-ம் திகதிவரை நடைபெறும். 23-ம் திகதி வியாழக்கிழமை காலை 5-30 மணி முதல் மாலை 7 மணி வரை கணபதி ஹோமம், நவக்கிரகஹோமம், அபிஷேகம், ருத்திரஹோமம், பூசை என்பன நடைபெறும்.

24-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 3-30 வரை பகவத்கீதா ஹோமம், அபிஷேகம், சண்டி ஹோம பூர்வாங்க பூசை, ஜபம் என்பன நடைபெறும்.

25-ம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 3-30 வரை ஹோமம், அபிஷேகம், நவாவரண பூசை என்பன நடைபெறும். அன்றைய தினம் நண்பகல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவாசமித்தியினர் அன்னதானம் வழங்குவர்.

# மானெழுவத்துறை முத்துமகமாரி

ஏர் வளம் மிக்க இலங்கிடும் புங்கை நகரி லென்றும்
சீர் வளம் மிக்க திருப்பதி மானெழுவத் தருளால்
பேர் வளம் மிக்கவள் முத்து மகமாயி பெருமாட்டி
தார் வளம் மிக்கவள் தாளை நினைவார்க்கோர் தாழ்விலையே.

சுந்தரவல்லி சுகிர்த கல்யாணி சுகமளிக்கும்
தந்திரகாரி மகிடசங் காரி சதுர் மறைகள்
தந்தவன் பாகத் துறைபவள் சாமள புங்கை நகர்
வந்தவள் மானெழுவத்துறை முத்து மகமாரியே.

ஆசிரியமணி சி. க. நாகலிங்கம்

(புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய இராசகோபுர மகா கும்பாபிஷேகம் இன்று (22-1-86) காலை நிகழ்வதையொட்டிப் பிரசுரமாகிறது.)

**அமெரிக்க அச்சுறுத்தலால்**

# லிபிய பெண் ராணுவமும் விசேட யுத்தப் பயிற்சி!

(கான்பரா)

லிபியா மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை அவுஸ்திரேலியாவும் நிராகரித்துள்ளது. பரவலான சர்வதேச ஆதரவு இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும் என்று அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் திரு. ஹெய்டன் அறிவித்துள்ளார்.

எனினும் விவசாயம் அல்லாத வேறு துறைகளில் லிபியாவுடன் முதலீடு செய்து கொள்ளப்படமாட்டாது என்று அவர் கூறியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, லிபியாவுக்கு எதிராக அமெரிக்கா தாக்குதலை நடாத்தலாம் என அஞ்சப்படுவதால் லிபிய இராணுவ பெண்கள் பகுதியினரின் விசேட பயிற்சிகளும், ஒத்திகைகளும் நேற்று முன்தினம் இடம் பெற்றன.

உலக நாடுகளிடையே இராணுவத்தில் பெண்கள் அதிகமாக இருப்பது லிபியாவில் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜாப். கடற்படை கூறும்**

## ரஷ்ய ஏவுகணை நாசகாரி கப்பல் நடமாட்ட தகவல்

(டோக்கியோ)

ஜப்பானியக் கடற்படையினர் கிழக்குச் சீனக் கடற் பிரதேசத்தில் சோவியத் ஏவுகணை நாசகாரி கப்பல் சென்றதாக அறிவித்துள்ளனர்.

இந்தக் கப்பல நேற்று முன்தினம் ஜப்பானியத் தீவான ஒக்கினேவா பகுதியின் அப்பால் சென்ற போது ஜப்பானிய ரோந்து கடற்படையினர் கண்டதாக ஜப்பானியப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

### முந்த முனைந்ததால் இந்த விளைவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் அகமதாபாத் நகருக்கு அருகில் இரு பஸ்கள் மோதியதால் 27 பேர் கொல்லப்பட்டதுடன், 47 பேர் காயமடைந்தனர். இந்த இரு பஸ்களும் ஒன்றை ஒன்று முந்த முனைந்தபோது இந்த விபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

### கைதிகளின் கஷ்டகாலம்

(பம்பாய்)

உத்தரப் பிரதேசத்தில் சிறைக் கைதிகள் மரங்களில் கட்டி வைக்கப்பட்ட பின்னர் தான் சிறைக்கூடங்களுக்குச் செல்கிறார்கள் என பி ரி ஐ. செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

இப்பகுதியில் சிறைக்கூட வசதிகள் போதாமையாலேயே பொலிசார் கைதிகளை கட்டி வைக்கின்றனராம்.

### பங்களாதேஷ் கோரிக்கை

(டாக்கா)

எய்ட்ஸ் நோய் தடுப்பு தொடர்பான விடயத்தில் ஆலோசகர் ஒருவரைத் தந்துதவுமாறு பங்களாதேஷ் உலக சுகாதார ஸ்தாபனத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

### தங்கம் சிக்கியது

(சென்னை)

சென்னையில் பத்து இலட்சம் ரூபா பெறுமதி மிக்க கடத்தல் தங்கம் பிடிபட்டுள்ளது.

## அணுகுண்டு: பாரத நிலைக்கு சுவீடன் பிரதமர் பாராட்டு

(புதுடில்லி)

"அணுக்குண்டு தயாரிக்கும் ஆற்றல் பெற்றிருந்தும் கூட அதைப்பயன்படுத்தாத பாரதத்தின் பங்கு பாராட்டத்தக்கது'' என்று சுவீடன் பிரதமமந்திரி திரு. ஒலெட்பலமே புகழ்ந்துரைத்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற வளரும் நாடுகளும் அணுசக்தியும் என்னும் கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

### பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

ஜப்பானியத் தூதுக்குழு ஒன்று தொழிலமைச்சர் திரு. திவாரியைச் சந்தித்து பொருளாதார ஒத்துழைப்புக் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

**சென்னையில் புலிகள் அறிவிப்பு**

## இருதயபுரம்: 30 அப்பாவி தமிழர்கள் படுகொலை

(சென்னை)

மட்டக்களப்பு இருதயபுரத்தில் நிகழ்ந்த சம்பவத்தில் முப்பத்தைந்து அப்பாவிப் பொது மக்கள் பொலிஸ் கொமாண்டோக்களால் கொல்லப்பட்டதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் நிகழ்ந்த வெவ்வேறு சம்பவங்களில் இராணுவத்தால் பதின்மூன்று தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் இக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

## சென்னை பொலிஸ்நிலைய தாக்குதல், இருவர் கொலை

(சென்னை)

வட சென்னையில் உள்ள வியாசர்பாடி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டபோது நிகழ்ந்த பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

பொலிஸ் நிலையம் மீது கற்கள் வீசப்பட்ட போது 42 பொலிசார் காயமடைந்தனர்.

சில நகரபஸ்களும் பொலிஸ் வாகனங்களும் சேதமடைந்தன.

பொலிஸ் நிலையத்தில் இருந்த ஒருவர் இறந்ததையடுத்து மக்கள் கலவரம் செய்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மூன்று பொலிஸ் அதிகாரிகள் தாகாலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

### அதிகாரிகள் கடத்தல்

(பெய்றூட்)

இங்குள்ள ஸ்பெயின் தூதரகத்தின் மூன்று அதிகாரிகளை இனம் தெரியாதவர்கள் கடத்திச் சென்றதாக அறிவிக்கப்பட்டது ஸ்பெயினும், இஸ்ரேலும புதிதாக தொடர்புகளை ஏற்படுத்தியதினால் இக் கடத்தல் விவகாரம் இடம் பெற்றுள்ளது.

### அதிபராக மீண்டும் கார்மல்

(மாஸ்கோ)

ஆப்கானிஸ்தான் அதிபராக திரு. கார்மல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக சோவியத்தின் உத்தியோக பூர்வ செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' தெரிவித்துள்ளது.

### ராஜீவ் தமிழருக்கு கௌரவம்

(புதுடில்லி)

நிர்வாக சீர்திருத்த ஊழியர் பென்ஷன் துறை இணையமைச்சராக திரு. பி. சிதம்பரம் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## 15 வினாடிக்கு ஒருகுழந்தை பாரதத்தில் நிகழ்வென தகவல்

(புதுடில்லி)

இந்தியாவில் குழந்தைகளின் பிறப்பு வீதம் தினமும் அதிகரித்து வருவதாக அறிவிக்கப் டுகிறது. இதனால் பதினைந்து வினாடிக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் இங்கு பிறப்பு நடக்கிறதாம்.

இந்த தகவலை சுகாதார குடும்பநல இணை அமைச்சர் திரு. கிருஷ்ணகுமார் வெளியிட்டார். எனினும் மக்கள் தொகை நூற்று இருபத்தைந்து கோடியை தாண்டமாட்டாது என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். 2050 ஆண்டில் இந்தியாவின் பிறப்பு வீதத்தை பூஜ்ஜியத்துக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட மத்திய அரசு உத்தேசித்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

நூற்று இருபத்தைந்து கோடியிலும் இது அதிகரித்தால் உலகில் சீனாவை விட இந்தியாவே மக்கள் தொகையில் முதலாம் இடத்தை வகிக்கும்.

**பிரான்ஸூம், பிரிட்டனும்**

## ஆங்கிலக் கால்வாயில் சுரங்கப்பாதை அமைக்கும்

(லண்டன்)

பிரான்ஸூம், பிரிட்டனும் ஆங்கிலக்கால்வாயில் இருவழி சுரங்கப்பாதை அமைக்கத் தீர்மானித்துள்ளன.

இதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையே ரயில், வாகனப் போக்குவரத்துகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பணிகள் அடுத்த வருடத்தில் ஆரம்பமாகும். இருநாட்டுப் பிரதம மந்திரிகளும் கூட்டாக இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

### பதவியேற்பும் ஓய்வு பெறலும்

(சரசாலை)

மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் கனிஷ்ட அதிபராகக் கடமையாற்றிய திரு சி. இராசசேகரம் மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய திரு. செ. நடராசா இளைப்பாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஓராண்டு நினைவஞ்சலி**



**செல்வி கௌஷல்யா தங்கராஜா**

மலர்வு: 29-12-1979 உதிர்வு: 22 1-1985

அன்பு மகளே!

காலன் எங்களிடமிருந்து இவ்வளவு சீக்கிரமாக உம்மை பிரித்துக் கொண்டான். மறைந்து ஓராண்டு ஆகியும் உமது நினைவு பசுமையே. உமது பிரிவால் வாடி அன்பு முகத்தைக் காணமல் வேதனையுடன் நினைவு கூர்ந்து உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

397, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அப்பா, மம்மி அண்ணா, அக்கா

B/1023

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

**அணில் ஐஸ்கிறீம்**




நிறைந்த சுவை
குறைந்த விலை
சுகாதார தயாரிப்பு
AVAILABLE IN
Cups, Family Blocks, Gallons & attractive Plastic Packs
பல சுவைகளில் கிடைக்கும்
Marketed by:
dyn ads marketing
476, பிரதான வீதி,
சுண்டுக்குளி

பின்வரும் விற்பனையாளர்களிடம் பெறலாம்:
லக்கி ட்ரேடர்ஸ் (தட்டா தெரு),
லிங்கம் ஸ்ரோர்ஸ் (வண்ணார்பண்ணை),
சின்னராசா கபே (பரு. வீதி),
பாலாஜி ட்ரேடர்ஸ் (மணிக்கூட்டு வீதி),
ஆனந்ஸ் (அரசடி வீதி),
ரவீந்திரா ஸ்ரோர்ஸ் (பிரதானவீதி),
பெமிலி காடின்ஸ் (சின்னக்கடை)
நாவலர் வீதி: ஜெயரட்ணம் ஸ்ரோர்ஸ், பமிலி செப், ரிப்-ரொப் சுப்பர் மாக்கட்
சுண்டிக்குளி: Cherryls. Aniethaa, காந்தன் களஞ்சியம்
திருநெல்வேலி: Superb Rank
சுன்னாகம்: ShobaB/1025
இருபாலைச் சந்தி: குமரன்

ஈழமுரசு

## பிரிட்டிஷ் பெண்மணி முல்லைத்தீவில் கடத்தப்பட்டார்

முல்லைத்தீவில் வைத்து பிரிட்டனைச் சேர்ந்த ஜெனிவோப்வின்னி என்ற பெண்மணி இனம் தெரியாத கோஷ்டியொன்றினுல் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றில் இவர் தங்கியிருந்தபோது கடத்தப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பெண்மணியைத் தாமே கடத்திச் சென்றதாக "ஈரோஸ்" இயக்கம் டில்லியில் அறிவித்துள்ளதாக 'ராய்ட்டர்' நேற்றிரவு அறிவித்துள்ளது. இவரைக் கடத்தியதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

**அரசாங்க அதிபரிடம் மகஜர்:**

# யாழ்நகரில் வசிக்கும் 20000 முஸ்லிம் மக்கள் புதிய சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்!

யாழ்ப்பாணத்திலுள்ள இருபதினுயிரம் முஸ்லிம் மக்கள் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தினுள்ளேயே வாழ்ந்து வருகின்றுர்கள். அத்துடன் அவர்களது வர்த்தக நிலையங்களும், உடைமைகளும் இவ் வலயத்தினுள்ளேயே அமைந்துள்ளன. இதனுல் இப்புதிய சட்டத்தினுல் முஸ்லிம் மக்களுக்கும், அவர்களது உடைமைகளுக்கும் பாரிய சேதமேற்படுவதைத் தடுக்க இச் சட்டத்தை இரத்து செய்வதோடு கோட்டை இராணுவ முகாமையும் அகற்றவேண்டும் என நேற்று நடந்த ஊர்வலத்தின் பின் யாழ். அரசாங்க அதிபரூடாக ஜனுதிபதிக்கு யாழ் முஸ்லிம் மக்கள் அனுப்பிய மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, ஏற்கனவே யாழ். கோட்டை முன்பாக இருந்த கடைகள் அகற்றப்பட்டதினுல் முஸ்லிம் மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டனர். வலயச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட அன்றைய தினமே மூன்று முஸ்லிம்கள் பஸ் நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மோட்டார் ஷெல் தாக்குதலால் மரணமடைந்தார்கள் ஒன்பதுபள்ளி வாசல்கள், நான்கு முஸ்லிம் பாடசாலைகள், முஸ்லிம்பிரசவ விடுதி, முஸ்லிம் உபதபாலகம், முஸ்லிம் நூலகம் உட்பட முஸ்லிம்களின் தேவையை பூர்த்தி செய்யும் பல நிறுவனங்களும் இவ்வலய எல்லைக்குள்ளேயே அமைந்துள்ளன.

இதன் பிரதிகள் முக்கிய அமைச்சர்களுக்கும், இஸ்லாமிய தூதுவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## பாதுகாப்பு வலயத்தால் 10 பாடசாலைகள் மூடும் நிலை

'புதிய பாதுகாப்பு வலயப் பிரகடனத்தினுல் யாழ்நகரில் மட்டும் பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்கமுடியாத நிலை ஏற்படும் இதனுல் ஏற்கனவே சீரழிவிற்கு உட்பட்டுள்ள இப்பிரதேச மாணவர்களின் கல்வி மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும்' என்று வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் திரு. வே. சிவராசா விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதனுல் ஏற்கனவே பல பாடசாலைகள் மூடப்பட்டும், தகர்க்கப்பட்டும் உள்ளன எனவே ஆசிரியர்களும், பெற்றோர்களும், கல்விமான்களும் இணைந்து இப்போக்கை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அண்மையில் நடைபெற்ற வடபிரதேச ஆசிரியர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி:**

## குடாநாட்டை இராணுவமயப்படுத்தும் நோக்கத்தின் முதற்படி வலயச்சட்டம்

எம்மை ஒடுக்கும் இனவெறி அரசு யாழ் குடாநாட்டுக்குள் செயற்படுத்த அதிகாரமளித்திருக்கும் 'பாதுகாப்பு' வலயம் குடநாட்டை இராணுவமயப்படுத்தும் நோக்கத்தின் முதற்படியே ஆகும். இவ்வாறு கூறும் துண்டுப் பிரசுரம் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் நேற்று வெளியிடப்பட்டது.

'இராணுவ முகாம்களை அகற்று, பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறு என முழங்கி வெகுஜனங்கள் கிளர்ந்தெழட்டும்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இப்பிரசுரத்தில் இத்திட்டத்தினுல் எமது மண்ணில் நாம் நடமாட முடியாது; எமது ஆலயங்களில் நாம் வழிபட முடியாது; எமது வைத்தியசாலைகளில் நாம் சிகிச்சை பெற முடியாது; எமது பாடசாலையில் நாம் கல்வி கற்க முடியாது. இந்த ஆபத்தை. இராணுவ அச்சுறுத்தலை நாம் முன்கூட்டியே உணர்ந்து உடனடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எம்மைத் தாக்கினல்....

இடம்பெறவும் மாட்டாது. அதேவேளையில் தமது கட்டடங்கள், காணிகளுக்குள் வெளியார் நடமாட இடம்கொடுக்காது சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக் கொள்ளவேண்டுமெனவும் பிரிகேடியர் சொன்ஞர். சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினர் கட்டுப்பாட்டை மீறி நடந்துகொண்டதையும் பிரிகேடியர் இங்கு ஒப்புக் கொண்டார். யாழ். ஆஸ்பத்திரி சேவைகள், பாடசாலை மாணவர் கல்வி, போக்குவரத்து ஆகியவைகள் பாதிக்காதவாறு தாம் பார்த்துக் கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் விளக்கினுர். பொதுமக்களிடமிருந்து போதிய தகவல்கள் ராணுவத்துக்குக் கிடைத்து வருவதாகச் சொன்ன அவர், அவைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை தங்களால் எடுக்க முடியாதிருப்பதாகவும் தெரிவித்தார். தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டம், தபாற்சேவை சீர்குலைவு, புகையிரத டிக்கட்டுகள் விற்பனை ஆகியன தொடர்பாக அடுத்த சில தினங்களில் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் பிரிகேடியர் ரூபசிங்கா அறிவித்தார். யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், உதவி அரச அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம், பேராசிரியர் கா சிவத்தம்பி, கேர்ணல ஜெமுனு குலதுங்கா, யாழ் பொலிஸ் சுப்பிரின்டன் கிங்ஸ்லி சில்வா ஆகியோரும் இம்மாநாட்டில் பங்கு பற்றினர்.

### கோட்டை முகாம் ...

பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே பொது மக்களது பாதுகாப்பிற்காகவே இம் மறியல் போராட்டம் நடத்தப்படுவதால் பொதுமக்கள் அனைவரும் இப்போராட்டத்தில் தொடர்ந்து பங்கு பற்றவேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்

மறியல் போராட்டத்தில் கூடுதலான மக்கள் கலந்து கொள்ளும் பட்சத்தில் போராட்டம் கச்சேரியுடன் மட்டுமே நிற்காமல்மற்றைய அலுவலகங்களுக்கும் தானுகவே விஸ்தரிக்கப்படும் எனவும் அவர் கூறினுர்.

இன்று முதல் தினமும் காலை எட்டு மணிமுதல் இம்மறியல் போராட்டம் நடைபெறும். இதற்காக பஸ் நிலையத்திலிருந்து கச்சேரிக்கு விசேட பஸ் சேவைகளை நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்படுகிறது.

### பென்ஷன் ...

தபால் நிலைய பென்சன் கொடுப்பனவுகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் பிராந்திய தபாலத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

### கடையடைப்பும் ...

ஒன்றும் யாழ் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படும்.

வர்த்தகர்களும், கடைச் சிப்பந்திகளும் கடைகளைப் பூட்டி, ஊர்வலத்தில் கலந்து கொண்டு ஆதரவளிக்க வேண்டுமென வர்த்தகர் சங்கச் செயலாளர் திரு. சி நமசிவாயம் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சென்னை சென்று ....

முறைகளைக் கைவிடுவதாக தமக்கு உறுதியளித்தால் தாம் சென்னைக்குச் சென்று தீவிரவாத பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த தயார் எனவும் ஜனுதிபதி மேலும் சொன்ஞர்.

### இவ்வாறு ...

பாதுகாப்பு வலயச் சட்டத்தை உடன் நீக்குமாறும், மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளிலிருந்து முகாம்களை மூடுமாறும் வேண்டியுள்ளார்.

### முஸ்லிம்....

களுக்கு எமது குரல் ஒலிக்கட்டும்" என்ற பெரியளவிலான சுலோகம் ஊர்வலத்தின் முன்னுல் காணப்பட்டது. கண்காணிப்பு வலயம் நரபலி எடுக்கவா?, அன்றைய ஹிட்லர், இன்றைய ஜே. ஆர், முஸ்லிம் அமைச்சர்களே முஸ்லிம்களைக் கொன்று அரசியல் இலாபம் தேடாதீர்கள்!, போர்ப்பிரகடனம் போராளிகளுடனு பொதுமக்களுடனு? போன்ற சுலோகங்களும் ஊர்வலத்தில் காணப்பட்டன.

மகஜரைப் பெற்றுக்கொண்டு அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் உரையாற்றுகையில், இம் மகஜரை உடனடியாக ஜனதிபதிக்கு தான் அனுப்பி வைப்பதாகவும், இன்று நடைபெற்ற ஊர்வலத்தைப் பற்றியும், அதில் கலந்துகொண்ட பொதுமக்கள் காட்டிய ஆர்வத்தையும் எடுத்துக் கூறுவதாகவும் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்த முஸ்லிம் பிரமுகர்கள் இங்கு உரையாற்றுகையில் இன்று சாதாரணமான நிலையிலேயே மக்கள் கொல்லப்படுகிறுர்கள். இந்த நிலையில் நாம் தூங்கிக்கொண்டிருப்பதால் எவ்வித பயனுமில்லை என்ற நிலையிலேயே இவ் ஊர்வலத்தை நடத்தியுள்ளோம்.

இன்று தமிழர்களும், முஸ்லிம்களும் ஒரே இனம். இதனை எவராலும் பிரித்துவிட முடியாது என்று தெரிவித்தார்கள்.

முஸ்லிம் மக்களால் நேற்று தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு காரணமாக நகரிலுள்ள பல கடைகள் உட்பட முஸ்லிம்களின் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

**பிரிகேடியரின் அறிக்கை:**

## நிலைமை சீரானதும் 'வலய' சட்டம் இல்லாது போகும்

யாழ்ப்பாணம் இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் எச். ரூபசிங்கா நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையின் விபரம் வருமாறு;-

"பொது மக்களின் பிரதிநிதிகள் சிலர் நேற்றுக் காலை என்னைச் சந்தித்தனர். அதன் விளைவாக உங்கள் எல்லோருக்கும் குறிப்பாக பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளோர்க்கு, ஒரு வாக்குறுதி கூற நான் விரும்புகிறேன்: கலவரமோ பீதியோ அடைவதற்கு தற்போது எதுவித காரணமும் இல்லை. இது தொடர்பாக பொதுமக்கள் முகம்கொடுக்க நேரும் பிரச்சினைகள் எவையாக இருந்தாலும் அவை அனுதாபத்துடன், உரியவாறு கருத்திற் கொள்ளப்படும் யாழ்ப்பாணக் கோட்டை மீது அண்மையில் நடைபெற்ற மோட்டர் தாக்குதல் காரணமாகவே இது எழுந்தமை நன்கு நயந்து புரிந்துகொள்ளப்படலாம். மோட்டர் தாக்குதலினுல் இராணுவ சிப்பாய் ஒருவர் இறக்க நேர்ந்தது.

பொதுவான பந்தோபஸ்து அக்கறையை முன்னிட்டே பாதுகாப்பு வலயங்கள் பிரகடனமாயின. இருந்தாலும், அதனையிட்டு ஓரளவு தவறான புரிந்துணர்வு இருப்பது போலத் தெரிகிறது. குடிசனங்களின பாதுகாப்பையிட்டு, சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் தகுந்தவேளை நினைவூட்டுவதாக இது அமையும் பந்தோபஸ்துப் படைகளைப் பொறுத்த மட்டில் திட்டவட்டமாக ஓர் உறுதிமொழி கூறிவைக்க நான் விரும்புகிறேன்: எமது நடவடிக்கைகள் எல்லாவற்றிலும், குடிசனங்களுக்கு காயம், பாதிப்பு என்பன ஏற்படாதிருத்தற்கு வேண்டிய முயற்சிகள் அனைத்தும் எடுக்கப்படும் அத்தகைய சோக சம்பவங்களைத் தவிர்த்தற்குச் சம்பந்தப்பட்ட எல்லோரதும்ஒத்துழைப்புவழங்கப்படும் என உளமார நம்பப்படுகிறது.

தேவை முடிவுற்ற உடனேயே, பாதுகாப்பு வலயங்கள் இல்லாது போய்விடும் என்பதும் குறிப்பிடப்படுகிறது" எனவும் பிரிகேடியர் தெரிவித்துள்ளார்.

### கொள்ளை

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள ஸ்ருடியோவொன்றிலிருந்து இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான புகைப்படக் கருவிகள் களவாடப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

### மாணவர் வரவு குறைகிறது

யாழ். மத்திய கல்லூரியும், வேம்படி மகளிர் கல்லூரியும் நேற்று நடைபெற்றபோதிலும் குறைந்தளவு மாணவ, மாணவியர்களே நேற்று சமுகமளித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பிரஜைகள் குழு....

யாழ்ப்பாணம் மக்கள் நடவடிக்கைக் குழுவினரும் பிரிகேடியரைச் சந்தித்து இப்பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சு நடத்தினர்.

### தமிழ்ப் பகுதியில்...

ராணுவத்தினர் கண்டதையடுத்தே இவ்வாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரு வெளிநாட்டவர்களும் தென்னிந்தியாவில் இருந்து சட்டவிரோதமாகவந்துள்ளதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று தெரிவித்துள்ளார்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 22-01-86 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336